# DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, PONNERI

**Case No.** : **C. C. No. 149/2023**

**Prosecution Witness** : **P. W. 2**

| | | | |
|---|---|---|---|
| Name | : கிருஷ்ணமூர்த்தி | | : |
| Father / Husband Name | : | | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the day of 25/02/2026

Accused absent.

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் தற்போது கவரைப்பேட்டை காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியிலிருந்து வருகிறேன். நான் சோழவரம் காவல் நிலையத்தில் தலைமைக் காவலராக பணியிலிருந்த போது, 15.09.2019ம் தேதி காலை 8 மணியளவில் உதவி ஆய்வாளர் குணசேகரன் தலைமையில் நான் மற்றும் தலைமைக் காவலர் ரவி ஆகியோர் சகிதம் வழிப்பறி மற்றும் குற்ற தடுப்பு சம்மந்தமாக சோழவரம் மற்றும் விஜயநல்லூர் ஆட்டந்தாங்கல் ஆகிய கிராமங்களை கண்காணித்துவிட்டு காந்திநகர் பெட்ரோல் பங்க் அருகே உள்ள பாழடைந்த கட்டிடத்தை கண்காணிக்கும் போது, அங்கு நின்றிருந்த 3 நபர்கள் கத்தி மற்றும் கட்டைகளுடன் இருந்தவர்களை மடக்கி பிடிக்க எத்தணித்த போது, எங்களை கண்டதும் ஓட முயற்சி செய்தவர்களை மடக்கி பிடித்து விசாரிக்க தன் பெயர் பார்த்திபன் என்றும், மற்றொரு நபர் சாய் (எ) அரவிந்த் மற்றும் முருகன் என்றும் தெரிவித்தனர். பின்னர் மூவரையும் பிடித்து விசாரிக்க தங்களுக்கு மது குடிப்பதற்காக காசு இல்லாததால் பொதுமக்களை மற்றும் சாலையில் செல்லும்

SHANKARAN MANJULA
Digitally signed by SHANKARAN MANJULA
Date: 2026.02.25 16:36:45 +0530

வாகனங்களை மடக்கி பணம் மற்றும் நகைகளை கொள்ளையடிக்கும் முயற்சியில் ஈடுபடுவதாக தெரிவித்தனர். பின்னர் எதிரி பார்த்திபன் பயன்படுத்திய கத்தியை மற்றும் கட்டைகளை கைப்பற்ற பொதுஜன சாட்சிகள் யாரும் முன்வராததால் போலிஸ் சாட்சிகளான நான் மற்றும் கிருஷ்ணமூர்த்தி, தலைமைக் காவலர் முன்னிலையில் 9.15 முதல் 10.15 மணி வரை பார்த்திபன் என்பவரிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டும், 9.45 மணியளவில் வழக்கு சொத்தான கத்தியை கைப்பற்றி எதிரி மற்றும் வழக்கு சொத்துடன் 11.00 மணிக்கு நிலையம் வந்து வழக்கு பதிவு செய்யப்பட்டது. **என்னிடம் காட்டப்படும் கத்தி மற்றும் 2 உருட்டுக்கட்டைகள் சான்றுபொருள் 1 முதல் 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜரிலுள்ள கையொப்பங்களில் 2வது கையொப்பம் என்னுடையது தான். **(ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜரிலுள்ள கையொப்பங்களில் 2வது கையொப்பம் முறையே அ.சா.ஆ.3,4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** வழக்கு சம்மந்தமாக உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பில்)**

விசாரணை அதிகாரியிடம் நான் அன்றைய தேதியில் ரோந்து சென்றதற்கான பீட் நோட்டை நான் வழங்கினேனா என்றால், இல்லை. நான் பிடித்த நபர்கள் அந்த பகுதியில் வசிக்கும் நபர்கள் என்றால், சரிதான். போலிஸ் பார்ட்டியான எங்களை கண்டதும் எதிரிகள் சிதறி ஓடினார்கள் என்று விசாரணையில் சொல்லியுள்ளேன். எந்த திசையில் எவ்வளவு தூரத்திற்கு ஓடினார்கள் என்றும், எந்தெந்த போலிசார் எந்தெந்த எதிரிகளை பிடித்தார்கள் என்ற விவரத்தை சொல்லவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்து கத்தி எந்த வகை, எவ்வளவு அளவுள்ளது போன்ற விவரங்கள் சொல்லவில்லை என்றால் சரிதான். அந்தப் பகுதி வாசிகளான எதிரிகள் மறைவிடத்தில்

SHANKARAN MANJULA
Digitally signed by SHANKARAN MANJULA
Date: 2026.02.25 16:36:54 +0530

இயற்கை உபாதை கழிக்க சென்ற போது தவறான வழக்கு போட்டிருக்கிறோம் என்றால் சரியல்ல. ஒப்புதல் வாக்குமூலம் தயார் செய்து கையெழுத்து போட்டது காவல் நிலையத்தில் என்றால் சரியல்ல. விசாரணையில் நான் சம்பவயிடத்தில் அது தயார் செய்யப்பட்டு அங்கேயே நான் சாட்சி கையெழுத்து போட்டேன் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். சான்றுபொருள் 2, 3 உருட்டுக்கட்டைகள் பொதுவாக கடைகளில் கிடைக்கக்கூடிய கட்டைகள் என்றால் சரிதான். நான் அவற்றை வழக்கிற்காக தயார் செய்தோம் என்றால் சரியல்ல.

SHANKARAN MANJULA

Digitally signed by SHANKARAN MANJULA
Date: 2026.02.25 16:37:01 +0530

<u>DEPOSITION OF WITNESS</u>

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, PONNERI

Case No. : C. C. No. 149/2023

Prosecution Witness : P. W. 1

| | | | |
|---|---|---|---|
| Name | : ரவி | | : |
| Father / Husband Name | : | | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the day of 25/02/2026

Accused absent.

<u>முதல் விசாரணை (அரசு தரப்பில்)</u>

நான் தற்போது திருவள்ளூர் தாலுகா காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியிலிருந்து வருகிறேன். நான் சோழவரம் காவல் நிலையத்தில் தலைமைக் காவலராக பணியிலிருந்த போது, 15.09.2019ம் தேதி காலை 8 மணியளவில் உதவி ஆய்வாளர் குணசேகரன் தலைமையில் நான் மற்றும் 1599 காவலர் கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் சகிதம் வழிப்பறி மற்றும் குற்ற தடுப்பு சம்மந்தமாக சோழவரம் மற்றும் விஜயநல்லூர் ஆட்டந்தாங்கல் ஆகிய கிராமங்களை கண்காணித்துவிட்டு காந்திநகர் பெட்ரோல் பங்க் அருகே உள்ள பாழடைந்த கட்டிடத்தை கண்காணிக்கும் போது, அங்கு நின்றிருந்த 3 நபர்கள் கத்தி மற்றும் கட்டைகளுடன் இருந்தவர்களை மடக்கி பிடிக்க எத்தணித்த போது, எங்களை கண்டதும் ஓட முயற்சி செய்தவர்களை மடக்கி பிடித்து விசாரிக்க தன் பெயர் பார்த்திபன் என்றும், மற்றொரு நபர் சாய் (எ) அரவிந்த் மற்றும் முருகன் என்றும் தெரிவித்தனர். பின்னர் மூவரையும் பிடித்து விசாரிக்க தங்களுக்கு மது குடிப்பதற்காக காசு

SHANKARAN MANJULA
Digitally signed by SHANKARAN MANJULA
Date: 2026.02.25 16:37:09 +0530

இல்லாததால் பொதுமக்களை மற்றும் சாலையில் செல்லும் வாகனங்களை மடக்கி பணம் மற்றும் நகைகளை கொள்ளையடிக்கும் முயற்சியில் ஈடுபடுவதாக தெரிவித்தனர். பின்னர் எதிரி பார்த்திபன் பயன்படுத்திய கத்தியை மற்றும் கட்டைகளை கைப்பற்ற பொதுஜன சாட்சிகள் யாரும் முன்வராததால் போலிஸ் சாட்சிகளான நான் மற்றும் கிருஷ்ணமூர்த்தி, தலைமைக் காவலர் முன்னிலையில் 9.15 முதல் 10.15 மணி வரை பார்த்திபன் என்பவரிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டும், 9.45 மணியளவில் வழக்கு சொத்தான கத்தியை கைப்பற்றி எதிரி மற்றும் வழக்கு சொத்துடன் 11.00 மணிக்கு நிலையம் வந்து வழக்கு பதிவு செய்யப்பட்டது. நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜரிலுள்ள கையொப்பங்களில் முதல் கையொப்பம் என்னுடையது தான். **(ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜரிலுள்ள கையொப்பங்களில் முதல் கையொப்பம் முறையே அ.சா.ஆ.1,2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** வழக்கு சம்மந்தமாக உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>**குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பில்)**</u>

விசாரணை அதிகாரியிடம் நான் அன்றைய தேதியில் ரோந்து சென்றதற்கான பீட் நோட்டை நான் வழங்கினேனா என்றால், இல்லை. நான் பிடித்த நபர்கள் அந்த பகுதியில் வசிக்கும் நபர்கள் என்றால், சரிதான். போலிஸ் பார்ட்டியான எங்களை கண்டதும் எதிரிகள் சிதறி ஓடினார்கள் என்று விசாரணையில் சொல்லியுள்ளேன். எந்த திசையில் எவ்வளவு தூரத்திற்கு ஓடினார்கள் என்றும், எந்தெந்த போலிசார் எந்தெந்த எதிரிகளை பிடித்தார்கள் என்ற விவரத்தை சொல்லவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்து கத்தி எந்த வகை, எவ்வளவு அளவுள்ளது போன்ற விவரங்கள் சொல்லவில்லை என்றால் சரிதான். அந்தப் பகுதி வாசிகளான எதிரிகள் மறைவிடத்தில்

SHANKARAN MANJULA
Digitally signed by SHANKARAN MANJULA
Date: 2026.02.25 16:37:21 +0530

இயற்கை உபாதை கழிக்க சென்ற போது தவறான வழக்கு போட்டிருக்கிறோம் என்றால் சரியல்ல. ஒப்புதல் வாக்குமூலம் தயார் செய்து கையெழுத்து போட்டது காவல் நிலையத்தில் என்றால் சரியல்ல. விசாரணையில் நான் சம்பவயிடத்தில் அது தயார் செய்யப்பட்டு அங்கேயே நான் சாட்சி கையெழுத்து போட்டேன் என்று சொல்லவில்லை என்றால் சரிதான்.

SHANKARAN MANJULA

Digitally signed by SHANKARAN MANJULA
Date: 2026.02.25 16:37:30 +0530